RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-32 | 01 பிப்ரவரி | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழகத்தில் பிப்.2 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, பிப்.1

தமிழகத்தில் இன்று முதல் பிப்., 2 ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



பிப்., 1 ஆம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும். பிப்., 2 ஆம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். பிப்., 3 ஆம் தேதி முதல் பிப்., 6 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 32கு செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24கு செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32குசெல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்ப நிலை 24கு செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். மீனவர்களுக்கான எச்சரிக்கையை பொறுததவரை தமிழக கடலோரப்பகுதிகள், வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அரபிக்கடல் பகுதிகளில் இன்று முதல் பிப்.04 வரை எச்சரிக்கை ஏதுமில்லை.

## அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு சிறப்பு புலனாய்வு குழுவிலிருந்து சைபர் க்ரைம் டிஎஸ்பி விலகல்

சென்னை, பிப்.1

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வு குழுவில் இருந்து டிஎஸ்பி விலகி உள்ளார்.




சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கோட்டூர் புரத்தை சேர்ந்த ஞானசேகரன் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை (எப்ஐஆர்) பொது வெளியில் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதையடுத்து, சென்னை உயர் நீதிமன்றம், இச் சம்பவம் குறித்து விசாரணை செய்து, சென்னை அண்ணாநகர் துணை ஆணையர் புக்யா சினேக பிரியா, ஆவடி காவல்துறை துணை ஆணையர் அய்மன் ஜமால், சேலம் மாநகர காவல்துறையின் துணை ஆணையர் பிருந்தா ஆகியோர் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து உத்தரவிட்டது.

மேலும், மாணவி பாலியல் வன்கொடுமை வழக்குடன், முதல் தகவல் அறிக்கை கசிந்த வழக்கையும் சேர்த்து சிறப்பு புலனாய்வு குழு விரைவாக விசாரிக்கும் என என்று உயர் நீதிமன்றம் கூறியது. அதன்படி சிறப்பு புலனாய்வுக் குழு கடந்த இரு வாரங்களாக, இரு வழக்குகள் குறித்தும் தீவிர விசாரணை செய்து வருகிறது.


இந்நிலையில், சிறப்புபுலனாய்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த மாநில சைபர் க்ரைம் பிரிவு டிஎஸ்பி ராகவேந்திரா கே.ரவி, தான் அந்த குழுவில் இருந்து விலகுவதாக உயர் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். புலனாய்வுக் குழுவில் போதிய ஒத்துழைப்பு இல்லாததாலும், கடுமையான நெருக்கடியுடன் பணிபுரிய வேண்டிய சூழல் இருப்பதாலும் ரவி, இந்த முடிவை எடுத்திருப்பதாக காவல்துறை வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் சிறப்பு புலனாய்வுக் குழுவில் இருந்து டிஎஸ்பி பணி விலகல் தொடர்பான எந்தவொரு அதிகாரபூர்வமான தகவலையும் தமிழக காவல் துறை தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அண்ணா 56வது நினைவு நாள் பிப்.3ல் திமுக அமைதிப் பேரணி

சென்னை, பிப்.1

முன்னாள் முதல்வர் அண்ணாவின் 56வது நினைவு நாளையொட்டி வரும் பிப்ரவரி 3ம் தேதி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது.



மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணாவின் 56வது நினைவு நாள் பிப்.3ம் தேதி வருகிறது. அன்றைய தினம் திமுக தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலின் தலைமையில், கட்சியின் பொதுச் செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் காலை 7 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

வாலாஜா சாலையில் இருந்து...: முன்னதாக அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள அண்ணா சிலை அருகில் இருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

இந்நிலையில், திமுகவின் இந்நாள், முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், அனைத்து அணியினரும் இந்த அஞ்சலிக் கூட்டத்தில் பங்கேற்பர் என சென்னை மாவட்ட திமுக சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவகங்கையில் சாலை பாதுகாப்பு மாத விழா

சிவகங்கை, பிப்.1

சிவகங்கை மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு மாத விழா இறுதி நாளான நேற்று வெள்ளிக்கிழமை நெடுஞ்சாலைத்துறை மற்றும் காவல்துறை இணைந்து பேரணி நடைபெற்றது.



இவ்விழாவினை காவல் துணை கண்காணிப்பாளர் அமலா அட்மின் கொடியை சேர்த்து துவக்கி வைத்தார். போக்குவரத்து காவல் ஆய்வாளர் சக்தி இசக்கி போக்குவரத்து சார்பு ஆய்வாளர் அழகுராணி நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் சையது இப்ராஹிம் உதவி பொறியாளர் ரமேஷ் குமார் ஆய்வாளர்கள். கருப்பையா முத்தையா மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஊழியர்கள் தலைக்கவசம் அணிந்து பேரணி நடத்தினர் .

இப்பேரணியின் சிறப்பு நிகழ்வாக இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் உதவி கோட்ட பொறியாளர் இணைந்து அனைவருக்கும் புதிய தலைக்கவசம் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தி துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.

## ‘உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும்’ நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரை

புதுடெல்லி, பிப்.1

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும் என்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்தார். மேலும், ஒரே நாடு, ஒரே தேர்தல், வக்பு திருத்த மசோதா ஆகியவற்றை நிறைவேற்றுவதை நோக்கி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.



இந்த ஆண்டின் முதல் கூட்டத் தொடரான பட்ஜெட் கூட்டத் தொடரை தொடங்கிவைக்கும் நோக்கில், நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு இன்று உரையாற்றினார். அப்போது அவர், “‘அனைவரின் ஆதரவு, அனைவரின் வளர்ச்சி, அனைவரின் நம்பிக்கை, அனைவரின் முயற்சி’ இதுவே எனது அரசின் மந்திரம். இரண்டு மாதங்களுக்கு முன்பு, நமது அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட 75 ஆண்டுகளைக் கொண்டாடினோம். சில நாட்களுக்கு முன்பு, 75 ஆண்டு பயணத்தை நிறைவு செய்தோம். அனைத்து இந்தியர்களின் சார்பாகவும், பாபாசாகேப் அம்பேத்கர் மற்றும் அரசியலமைப்பு நிர்ணயக் குழுவில் இருந்த அனைவருக்கும் நான் தலைவணங்குகிறேன்.

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில் வரலாற்று சிறப்பு மிக்க மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. இது நமது கலாச்சார மரபுகள் மற்றும் சமூக விழிப்புணர்வின் திருவிழா. இந்தியா மற்றும் உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த கோடிக்கணக்கான பக்தர்கள் பிரயாக்ராஜில் புனித நீராடியுள்ளனர். மவுனி அமாவாசை அன்று நடந்த விபத்துக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.

சில தினங்களுக்கு முன்பு நாம் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை இழந்துவிட்டோம். நாட்டின் பிரதமராக 10 ஆண்டு காலம் பணியாற்றியவர் அவர். நாடாளுமன்ற உறுப்பினராக மிக நீண்ட காலம் இருந்தவர். அவருக்கு எனது மரியாதையை செலுத்துகிறேன்.

மிகப் பெரிய முடிவுகள் மிகவும் வேகமாக எடுக்கப்பட்டு வருவதை இன்று நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. பெண்கள், இளைஞர்கள், நடுத்தர வர்க்கத்தினர், விவசாயிகள் ஆகியோருக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்குவதற்கான உறுதியான நடவடிக்கையை எனது அரசு எடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேலும் 3 கோடி வீடுகளைக் கட்ட எனது அரசு முடிவெடுத்துள்ளது. நடுத்தர வர்க்கத்தினரின் சொந்த வீடு எனும் கனவை நனவாக்குவதில் எனது அரசு உறுதிபூண்டுள்ளது.

எனது அரசாங்கம் பழங்குடி சமூகத்தின் ஐந்து கோடி மக்களுக்காக ‘தார்தி ஆபா பழங்குடி கிராம மேம்பாட்டு திட்டத்தை’ தொடங்கியுள்ளது. ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான சட்டம், வக்பு திருத்த சட்டம் ஆகியவற்றைக் கொண்டு வருவதை நோக்கி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எனது அரசாங்கம் இளைஞர்களின் கல்வி மற்றும் அவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆறு கோடி மூத்த குடிமக்களுக்கு சுகாதார காப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடுத்தர வர்க்கத்தினரின் சொந்த வீடு என்ற கனவை நிறைவேற்ற எனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. நாட்டில் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியில் எனது அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. 3 கோடி லட்சாதிபதி பெண்களைக் கொண்டிருக்க அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது. இன்று அதிக எண்ணிக்கையிலான பெண்கள் போர் விமானங்களை ஓட்டுவது, காவல்துறையில் சேருவது மற்றும் நாட்டில் உள்ள நிறுவனங்களை வழிநடத்துவது என நாட்டுக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். நமது மகள்கள் ஒலிம்பிக் பதக்கங்களை வென்று நாட்டை பெருமைப்படுத்துகிறார்கள்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் பிப்ரவரி 13ம்தேதி வரை நடைபெறும். 2ம் கட்ட கூட்டத் தொடர் மார்ச் 10ல் தொடங்கி ஏப்ரல் 4ம் தேதியுடன் நிறைவடையும். 202526ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நாளை (பிப்.1) தாக்கல் செய்ய உள்ளார். இதன்மூலம், தொடர்ச்சியாக 8 முறை பட்ஜெட் தாக்கல் செய்த முதல் நிதி அமைச்சர் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் பிப்ரவரி 3, 4, 5ம் தேதிகளில் நடைபெறும். இந்த கூட்டத்தொடரில், நிதி மசோதா 2025, வக்பு மசோதா, வங்கி ஒழுங்கு முறை சட்ட திருத்த மசோதா, இந்தியன் ரயில்வே மற்றும் இந்தியன் ரயில்வே வாரிய சட்ட ஒருங்கிணைப்பு மசோதா உள்ளிட்ட 16 மசோதாக்களை மத்திய அரசு தாக்கல் செய்ய உள்ளது.

விமான போக்குவரத்து துறை தொடர்பான நிதி நலன்களை பாதுகாக்கும் மசோதாக்கள், குடியேற்றம், வெளிநாட்டினர் நுழைவு தொடர்பான தற்போதைய விதிமுறைகளை மாற்றும் மசோதாக்கள், கோவா மாநில சட்டப்பேரவை தொகுதிகளில் பட்டியல் பழங்குடியினரின் பிரதிநிதித்துவத்தை மறுசீரமைப்பு செய்வதற்கான மசோதா ஆகியவையும் தாக்கலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள குழப்பமான வரி முறைகளை எளிமைப்படுத்தும் விதமாக வருமான வரி தொடர்பான புதிய நேரடி வரி சட்ட (Direct Tax Code) மசோதாவும் அறிமுகமாகும் என தெரிகிறது.

பட்ஜெட் எதிர்பார்ப்புகள்: மாத சம்பளதாரர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் தனிநபர் வருமான வரி விலக்கு வரம்பு இந்த பட்ஜெட்டில் ரூ.10 லட்சமாக அதிகரிக்கப்படலாம். புதிதாக 2 வரிப் பிரிவுகள் சேர்க்கப்படலாம் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. பட்ஜெட்டில் பொருளாதார நடவடிக்கைகளை முடுக்கிவிடும் வகையில் மூலதன செலவினத்துக்கான ஒதுக்கீட்டை 20 சதவீதம் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் மக்களின் செலவிடும் வருவாய் அதிகரிக்கும் என்பதுடன், அது பொருளாதார சுழற்சிக்கு வித்திடும் என்பது அரசின் மதிப்பீடாக உள்ளது. 2026 மார்ச் இறுதிக்குள் நிதி பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதமாக கட்டுக்குள் வைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்படலாம் என்று யர்னஸ்ட் யங் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘டாலரை நிராகரித்தால் 100% வரி’ பிரிக்ஸ் நாடுகளுக்கு ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை

வாஷிங்டன், பிப்.1

டாலருக்கு பதில் வேறு ஒரு புதிய கரன்ஸியை உருவாக்கினால் 100 சதவீத வரி விதிப்பை எதிர்கொள்ள வேண்டியது இருக்குமென்று பிரிக்ஸ் நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அமெரிக்க அதிபர் தனது சமூக ஊடகதளமான ட்ரூத் சோசியலில் வெளியிட்டுள்ள பதிவில், “பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டாலரை விட்டு விலகிச்செல்ல முயற்சிக்கின்றன. நாங்கள் அதை ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் காலம் முடிந்துவிட்டது. எதிரிகளைப் போலத் தோன்றும் அந்த நாடுகளுடன் நாங்கள் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளவிருக்கிறோம். அதாவது அவர்கள் புதிய பிரிக்ஸ் கரன்ஸியை உருவாக்கக் கூடாது அல்லது டாலருக்கு நிகராக மற்றொரு கரன்ஸியைத் தேடக் கூடாது, இல்லையென்றால் 100 சதவீத வரி விதிப்பைச் சந்திக்க நேரிடும் அல்லது மகத்தான அமெரிக்க பொருளாதாரத்தில் வியாபாரம் செய்யும் எதிர்பார்ப்பைக் கைவிட வேண்டும் என்பதே அது.” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த 2024 டிசம்பரில் ரஷ்யா, ‘பிரிக்ஸ் நாடுகளை டாலரைப் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தப்படும் எந்த ஒரு நடவடிக்கையும், தேசிய பணத்தின் தேவையை வலுப்படுத்தும் ’ என்று தெரிவித்திருந்தது.

இதனிடையே, அட்லாண்டிக் கவுன்சிலின் புவிபொருளாதார மையம் நடத்திய கள ஆய்வில், முதன்மை கையிருப்பு பணமாக அமெரிக்க டாலரை உலக அளவில் நம்பியிருப்பது தெரியவந்துள்ளது. மேலும் அமெரிக்க டாலரை மதிப்பு நீக்குவதில் யூரோ மற்றும் மாற்று பணத்தை உருவாக்கும் முயற்சி தோல்வியடைந்து விட்டது என்பதை இது காட்டுகிறது.

பிரிக்ஸ் கூட்டமைப்பில், பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா, எகிப்து, எதியோப்பியா, ஈரான், இந்தோனேசியா மற்றும் ஐக்கிய அரபு அமிரகம் ஆகிய நாடுகள் உள்ளன. இந்தக் குழுவுக்கென தனியாக பொதுப்பணம் இல்லை. உக்ரைன் போருக்கு பின்பு, ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ள நிலையில் பொது பணத்துக்கான பேச்சுக்கள் எழுந்துள்ளது.

அதேபோல், அமெரிக்கப் பொருளாதாரம் சிறப்பாக இருப்பதாலும், வரிவிதிப்பு மற்றும் பணவியல் கொள்கைகளில் ஏற்படும் மாற்றம் புவிசார் அரசியல் பிரச்சினைகள் காரணமாக டாலருக்கு நிகரான உந்துதல் அதிகரித்துள்ளது என்று ராய்ட்டர்ஸ் செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்ரம்பின் வரிகள்: சட்டவிரோத குடியேற்றம் மற்றும் ஒப்பியாய்டுகள் போன்ற போதை வஸ்துக்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதைத் தடுக்க அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோவுக்கு பிப்.1ம் தேதி முதல் 25 சதவீதம் வரிவிக்கப்படும் என்று ட்ரம்ப் உறுதியளித்திருந்தார்.

அமெரிக்காவுக்கு தீங்குவிளைவிக்கும் அச்சுறுத்தலாய் இருக்கும் ஒப்பியாய்டு விநியோகத்தில் சீனாவின் பங்கு இருப்பதாய் கூறி அந்நாட்டின் இறக்குமதி பொருள்களுக்கு 10 சதவீதம் வரி விதிக்கப்போவதாக அச்சுறுத்தல்விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஒரு பவுன் ரூ.61,000ஐ கடந்தது தங்கம் விலை வரலாறு காணாத புதிய உச்சம்

சென்னை, பிப்.1

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் இன்று (வெள்ளிக்கிழமை) பவுனுக்கு ரூ.960 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.61,840 என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது. இது வரலாறு காணாத விலையுயர்வாகும்.



சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலையில் அவ்வப்போது மாற்றம் ஏற்பட்டு உயர்ந்தும், குறைந்தும் விற்பனையாகி வருகிறது.

அண்மைக்காலமாகவே தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து, ஒரு பவுன் ரூ.60 ஆயிரத்தை கடந்து புதிய உச்சத்தை தொட்டது. இந்நிலையில், தங்கம் விலை இன்று மேலும் அதிகரித்துள்ளது. இதன்படி, கிராம் ஒன்றுக்கு ரூ.120 அதிகரித்து ஒரு கிராம் ரூ.7,730க்கும், பவுனுக்கு ரூ.960 அதிகரித்து ஒரு பவுன் ரூ.61,840க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.107க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ பார் வெள்ளியின் விலை ரூ.1,07,000 ஆக உள்ளது.

அமெரிக்க ஃபெடரல் வங்கி வட்டி விகிதங்களில் மாற்றமில்லை என்று அறிவித்துள்ளது, டாலருக்கு மாற்றாக வேற நாணயத்தைக் கொண்டு வர முயற்சித்தால் கூடுதல் வரி விதிக்கப்படும் என இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகளுக்கு மீண்டும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளதும் தங்கம் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நகர்வுகளால் தங்கம் பாதுகாப்பான முதலீடாக கருதப்பட்டு அதன் மீதான முதலீடுகள் அதிகரித்துள்ளதால் தங்கம் விலை உயர்ந்துள்ளது. உள்நாட்டைப் பொருத்தவரை திருமண சீசன் என்பதால் நகை வாங்கும் தேவை அதிகரித்துள்ளதன் காரணத்தாலும் விலை ஏறியுள்ளது.

மாலை தந்தி



## புதிய பாம்பன் பாலத்தில் பயணிகள் ரயிலின் காலிப்பெட்டி தொடரின் முதல் பயணம்




மதுரை : பிப்.1

கன்னியாகுமரி ராமேஸ்வரம், திருப்பதி இராமேஸ்வரம் ஆகிய ரயில்களின் பராமரிப்பு பணிகள் ராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று காலை கன்னியாகுமரி இராமேஸ்வரம் ரயிலின் காலிப்பெட்டி தொடர் புதிய பாம்பன் பாலத்தில் தன் முதல் பயணத்தை முத்திரை பதித்துள்ளது. மண்டபம் ரயில் நிலையத்தில் இருந்து காலை 06.00 மணிக்கு புறப்பட்ட இந்த ரயில் 25 நிமிடங்களில் காலை 06.25 மணிக்கு ராமேஸ்வரம் சென்றடைந்தது.



மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் செக்கானூரணியில் நடைபெற்ற புதிய பேரூந்து நிலைய பூமி பூஜையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, திமுக தெற்கு மாவட்ட செயலாளர் மணிமாறன் கலந்துகொண்டு பணிகளை துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் இந்துமதி, வட்டார வளர்ச்சி அலுவலர் கீதா, ஊராட்சி ஒன்றிய பொறியாளர்கள் மாயன், திருமலைச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்ட தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக தியாகிகள் தினம் உறுதி மொழி ஏற்பு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் துணை ஆணையர்கள் தெற்கு மற்றும் தலைமையிடம் காவல் ஆணையர் அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானலில் பாஜக பிரமுகர் கார் கண்ணாடி உடைப்பு காவல் நிலையத்தில் புகார்

கொடைக்கானல் பிப்.1

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பாஜக பிரமுகர் நான்கு சக்கர வாகனத்தை உடைத்த மர்ம நபர்கள் குற்ற வாளிகளை கண்டுபிடிக்க முடியாமல் போலீசார் திணறல்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நாயுடுபுரம் பகுதியில் வசித்து வருபவர் சரவணக்குமார் இவர் திண்டுக்கல் மாவட்ட பாஜக நெசவாளர் பிரிவு செயலாளர் மற்றும் கொடைக்கானல் செய்தியாளராக இருந்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அவருக்கு சொந்தமான (இனோவா ) நான்கு சக்கர வாகனத்தை அவர் வீட்டின் அருகில் நிறுத்தி வீட்டிற்கு சென்று விட்டார்.

மேலும் காலை வழக்கம் போல் தன்னுடைய வாகனத்திற்கு வந்துள்ளார் அப்பொழுது வாகனத்தின் அனைத்து கண்ணாடிகள் உடைந்த நிலையில் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி



அடைந்தார்.

இதனைத் தொடர்ந்து கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் மேலும் சிசிடிவி பதிவுகளையும் அளித்துள்ளார்.

ஆனால் தற் போது வரை காவல் நிலை யத்தில் எந்த ஒரு நடவடிக் கையும் எடுக்காததால் பாஜக கட்சிமேல் நிர்வாகிகளை அணுகியுள்ளார்.

இந்நிலையில் நேற்று கொடைக்கானல் பாஜக நகர தலைவர் மதன் காவல் நிலையத்திற்கு சென்று கேட்டபொழுது கொடைக்கானலில் போதிய காவலர்கள் இல்லாத காரணத்தினால் குற்றவாளிகளை கண்டறிய முடியவில்லை என்றும்

மேலும் எங்கள் வாகனத்தை சேதப்படுத்திய நபரை கண்டறிந்து தகுந்த தண்டனை கொடுக்கவில்லை என்றால் பாஜக சார்பாக அனைவரும் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று கூறியுள்ளனர்.

## தேனி மாவட்டத்தில் மனிதநேய வார நிறைவு விழா

தேனி, பிப்.1

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனிதநேய வார நிறைவு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார்முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர்பேசியதாவது,

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 நாள் முதல் ஜனவரி 30 ஆம் நாள் வரை மனிதநேய வாரவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. மனிதநேயம் என்பது சக மனிதர்களிடத்தில் அன்பு காட்டுவது மட்டும் அல்ல பிற உயிர்களிடத்தும் நாம் மனிதநேயத்தினை கடைபிடித்து இரக்ககுணத்துடன் செயல்பட வேண்டும். பிறருக்கு உதவுதல், கோவம், பொறாமை, வெறுப்பு, குற்றம் காணுதல், போன்ற தீயகுணங்களை தவிர்த்து சக மனிதர்களிடம் அன்பாக இருக்க பழகுவதே மனிதநேயமாகும்.



மனிதநேயத்துக்கும், கால நிலை மாற்றத்திற்கும் தொடர்பு உண்டு ஏனெனில், மனிதன் தன்தேவைகளுக்கு அதிகமாக இயற்கை வளங்களை பயன்படுத்துவதாலும், பிளாஸ்டிக் மற்றும் இரசாயன பொருட்கள் பயன்படுத்துவதாலும் வனமும், வனவிலங்குகளும் பாதிக்கப்படுகிறது. எனவே, இயற்கை வளங்களின் மீதும் அக்கறை கொண்டு, அதனை நம் அடுத்த தலைமுறையினருக்கு பாதுகாப்பாக கொண்டு செல்வதற்காக தங்கள் வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் பிளாஸ்டிக் பயன்பாட்டினை ஒழிக்கவும், இயற்கை வளங்கள் பாதுகாப்பு குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மனிதர்கள் மனிதர்களாக வாழ்வதைவிட மனிநேயத்துடன் வாழ்வதே சிறந்த வாழ்க்கை என்று மகாத்மா காந்தியடிகள் கூறியதுபோல் நாமும் மனிநேயத்துடன் வாழ்வோம். மேலும் மனிதநேய வார விழாவினை முன்னிட்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர்தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மனிதநேய வார விழாவினை முன்னிட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர்வழங்கினார்.

இந்நிகழ்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் (பொ) சரளா, மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்கள், மாணவ, மாணவியர்கள் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பல்லாவரத்தில் சமூகநீதி மாணவர் இயக்கம் சார்பில் காந்தி படுகொலை பயங்கரவாத எதிர்ப்பு நாள் கருத்தரங்கம்

பல்லாவரம் பிப்.1

செங்கல்பட்டு சமூகநீதி மாணவர் இயக்கம் மண்டல செயலாளர் ஜெய்னுல் ஆபிதீன் தலைமையில் நடைபெற்றது.

மனிதநேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு அரசு ஹஜ் கமிட்டி தலைவர் அண்ணன் ப. அப்துல் சமத், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம். யாக்கூப் எம்பி அவர்கள், தேசிய இளைஞர்அணி காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் சட்டப்பிரிவு மௌலவிஆலிம் அல் புகாரி, திராவிடர் கழகத்தின் மாநில துணை பொதுச் செயலாளர் வழக்குரைஞர் சே.மெ.மதி




வதனி, மனிதநேய மக்கள் கட்சி மாநில அமைப்பு செயலா ளர் மாயவரம் ஜெ.அமீன், மனிதநேய மக்கள் கட்சி மாநில வழக்குரைஞர் அணி செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், மனிதநேய மக்கள் கட்சி மாநில இளைஞரணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி ஆகியோர் சிறப்பு உரையாற்றினார்கள்.

மேலும் SMI செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் குல் முகமது முன்னிலை வகித்தார்கள் மேலும் தமுமுக மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் எஸ்.கே .ஜாகிர் உசேன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம்,

தமுமுக மாவட்ட செயலாளர் பாருக் அஹமது,மாநில MTS பொருளாளர் ஆசிக் ஹமிது, மக்கள் உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அணி மாநில துணைச் செயலாளர் முகமது நயினார், மாநில விளையாட்டு அணி துணைச் செயலாளர் ரஹ்மத்துல்லாஹ்,

தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் முகம்மது ஜமீல், மாவட்ட துணைச்செயலாளர்கள் பம்மல் யூனுஸ், மன்சூர் அலிகான், மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், சமூக நீதி மாணவர் இயக்க சகோதரர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

இறுதியாக சமூகநீதி மாணவர் இயக்க செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொருளாளர் சமீயுல்லா நன்றி உரையாற்றினார்கள்.

## கண்டுகொள்ளாத ஊராட்சி நிர்வாகத்தால் தேங்கிய கழிவுநீர் கால்வாயில் விழுந்த குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியது

### கீரப்பாக்கம் ஊராட்சியில் பரபரப்பு

கூடுவாஞ்சேரி, பிப்.1

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட, கீரப்பாக்கம் ஊராட்சியில், கீரப்பாக்கம், முருகமங்கலம், அருங்கால் ஆகிய கிராமங்கள் உள்ளன. இங்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஊராட்சிக்கு உட்பட்ட 4வது வார்டு, விநாயகபுரம், 3வது தெருவை சேர்ந்த ரேவதிபழனி என்ற தம்பதியரின் 3 வயது ஆண் குழந்தை பிரதீப் வீட்டிலிருந்து சாலைக்கு கடந்து வந்தான். அப்போது தேங்கி இருந்த கழிவுநீர் கால்வாயில் விழுந்து தண்ணீரில் மூழ்கினான்.

இதனை கண்டதும் அவனது தாய் ரேவதி மற்றும் அக்கம் பக்கத்தினர் அலறி அடித்தபடி ஓடி வந்து குழந்தையை தூக்கி மீட்டனர். இதுகுறித்து அப்



பகுதி மக்கள் கூறுகையில், கோணல் மானலாக மூடி போடாமல் தரமற்ற முறையில் அமைக்கப்பட்ட கால்வாயில் வீடுகளில் இருந்து வெளியேறும் சாக்கடை கழிவுநீர் ஒரு மாத மாக தேங்கி இருக்கிறது. இதனால் அப்பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசுகிறது. கொசு உற்பத்தி அதிகமாகி பச்சிளம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வாட்டி வதைக்கிறது.

இதுபோன்று இப்பகுதியில் ஏராளமான குழந்தைகள் கால்வாயில் விழுந்து எழுந்து செல்கின்றனர். மேலும் ஊராட்சிக்கு உட்பட்ட 4வது வார்டு பகுதியில் 100க்கும் மேற்பட்ட குடிநீர் குழாய்கள் உடைந்து அலங்கோல நிலையில் காட்சியளிக்கிறது. மேலும் கழிவுநீர் கால்வாயில் உள்ள குழாய்கள் உடைந்து அதில் கழிவுநீர் கலந்தால் காலரா உள்ளிட்ட பல்வேறு தொற்று நோய்கள் பரவும் பேராபத்து உள்ளது.

இதில் ஊராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏதும் செய்து தரவில்லை என்றும், குடிநீர், தெருவிளக்கு, சாலை, கால்வாய் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி வலியுறுத்தியும் எந்த ஒரு பயனும் இல்லை. இதுகுறித்து ஊராட்சி மன்ற தலைவரிடம் கூறினால் எனக்கா ஓட்டு போட்டீங்க? யாருக்கு ஓட்டு போட்டிங்களோ அவரிடம் சென்று கேளுங்கள் என்று அலட்சியமாக பதில் கூறுகிறார். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பலமுறை புகார் கூறியும் கண்டு கொள்ளவில்லை.

எனவே இதுகுறித்து மாவட்ட கலெக்டர் நேரில் சென்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர். மேலும் தேங்கிய கழிவுநீர் கால்வாயில் விழுந்த குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய சம்பவத்தால் கீரப்பாக்கம் ஊராட்சியில் பரபரப்பு ஏற்பட்டது.

## சிவகங்கை மாவட்டத்தில் உதவி வேண்டி மனு அளித்த மூதாட்டி மனுவின் மீது உடனடி நடவடிக்கை

சிவகங்கை, பிப்.1

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட தமறாக்கி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த கருப்பாயி த/பெ சின்னக்கருப்பன் கடந்த 27.01.2025 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், புதிய குடும்ப அட்டை, அரசின் இலவச வீடு மற்றும் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை வேண்டி மனு அளித்தார்.

அதனைத்தொடர்ந்து, அம்மனுவின்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, புதிய குடும்ப அட்டை உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அம்மனுதாரர் மாதந்தோறும் ரூ.1,200/ முதியோர் உதவித்



தொகையாக பெற்று வரும் நிலையில், தற்போது மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் தேசிய அடையாள அட்டையும் வழங்கப்பட்டு, UDID அடையாள அட்டை பதிவு மேற்கொள்ளப்பட்டு, கடும் ஊனமுற்றவர்களுக்கான மாதாந்திர உதவித்தொகையாக ரூ.2,000/ வழங்குவதற்கான விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளபட்டுள்ளது, அதனைத் தொடர்ந்து ஆணையும் வழங்கப்படும்.

மேலும், தற்போது வழங்கப்பட்டுள்ள புதிய குடும்ப அட்டையின் வாயிலாக, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் பதிவும் மேற்கொள்ளப்பட்டு, மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் செயற்கை காலும் வழங்குவதற்கு ஏதுவாக அளவீடும் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தன்னார்வலர்கள் மூலம் அம்மனுதாரரின் இல்லத்தினை புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவரின் கோரிக்கைகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.



தென்காசி இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனிதநேய வார நிறைவு நாள் விழா தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.தி.சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.



ஒட்டன்சத்திரம் அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் பேசிய தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு வினாபோட்டி தலைமை ஆசிரியர் கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர்கள் பாண்டியராஜன்,மணிகண்ட பூபதி முன்னிலை வகித்தனர். போட்டியில் பரிசு பெற்ற மாணவிகளுக்கு ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் ஏ.ஆசை தம்பி பரிசுகள் வழங்கினார்.

# சென்னை நண்பர்கள் நல மன்றம் முன்னாள் தலைவர் ஆசிரியர் பழனி இல்லத் திருமணவிழா



சென்னை பிப்.1

குரோம்பேட்டை, குமரன் குன்றம் முருகன் திருக்கோவிலில் நடைபெற்ற, நண்பர்கள் நல மன்றம் முன்னாள் தலைவர், கோவி.பழனி மகன் ப.உதயாதித்தன் ஹ.சுபத்ரா இணையரின் திருமண விழாவில் பசுமைத்தாயகம் தலைவர் முனைவர் திருமதி சௌமியா அன்புமணி பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் செங்கற்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் கீழ் கட்டளை வெங்கடேசன், பசுமைத் தாயகம் மாநில துணைச் செயலாளர் நா.கண்ணன், கவிஞர் காவிரி நாடன், தலைமை ஆசிரியர் டாக்டர் தாமரைக் கண்ணன்,

முனைவர் கோ.பெரியண்ணன் டாக்டர் பெ.மயிலவேலன், எழுத்தாளர் கோ.எத்திராஜன், வன்னியர் வரலாற்று ஆய்வாளர் ஆறு அண்ணல் அவர்கள் உள்ளிட்ட சொந்தங்கள் உடன் இருந்தனர்.



மதுரை தெற்குமாசி வீதியில் ASR தங்க மாளிகை 2 வது கிளை திறப்புவிழாநடைபெற்றது. இவ்விழாவிற்கு ASR தங்கமாளிகையின் உரிமையாளர்கள் ராமமூர்த்தி, ஜானகிராமன், சரவணன், தாமோதரன் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர். திறப்பு விழா சலுகையாக வாடிக்கையாளர்களுக்கு பவுனுக்கு ஒன்றிற்கு 1500 தள்ளுபடி வைரம் கேரட் ஒன்றிற்கு 10,000 தள்ளுபடி மற்றும் நகை வாங்கும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நிச்சய பரிசு உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். திறப்பு விழாவிற்கு பல்வேறு தொழிலதிபர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.





திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில், மாமன்ற கூட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடிநீர் வசதி, சாலைவசதி, தெருவிளக்கு வசதி, குப்பை பிரச்சினைகள், பாதாள சாக்கடை திட்டங்கள் மற்றும் பலத்திட்டங்களை பற்றி ஆலோசனை கூட்டம் நிகழ்ச்சி மேயர் அலுவலக மைய கூட்டரங்கில் மாமன்ற கூட்டம் நடைபெற்றது. இதில் வடக்கு மாநகரகழக செயலாளர் மேயர் ந. தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாநகராட்சி ஆணையாளர் சு.ராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மனிதநேய வார விழாவினை முன்னிட்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணாக்கர்களுக்கு பாராட்டு

சிவகங்கை, பிப்.1



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற மனிதநேய வார நிறைவு விழா நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், மனிதநேய வார விழாவினை முன்னிட்டு, பள்ளி மாணாக்கர்களிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணாக்கர்களுக்கு பாராட்டு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார்(மானாமதுரை), எஸ்.மாங்குடி(காரைக்குடி) ஆகியோர் முன்னிலையில் வழங்கி தெரிவிக்கையில்,

எவ்விதப்பாகுபாடின்றியும், எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல் உதவி செய்யும் எண்ணம்தான் மனித நேயத்திற்கு அடிப்படையாக திகழும். அதை ஒவ்வொருவரும் உறுதிப்படுத்தும் விதமாக செயல்பட்டு, ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்திடல் வேண்டும்.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கப்பெறவேண்டும் என்ற அடிப்படையில், அரசின் சார்பில் அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை கருத்தில் கொண்டு, அத்திட்டங்களை பெறுவதற்கான அனைத்து வழிமுறைகளையும் முறையாக அறிந்து கொண்டு, அத்திட்டங்கள் மூலம் முழுமையாக பயன்பெற்று, வாழ்வில் சிறந்து விளங்கிடுவதற்கு அடிப்படையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



இந்நிகழ்ச்சியில்,மனிதநேயம் குறித்து பள்ளி மாணவ மாணவியர்கள் தங்களின் பேச்சுத்திறன் வாயிலாக விரிவாகவும், சிறப்பாகவும் இங்கு எடுத்துரைத்தனர். இதனை கருத்தில் கொண்டு, எவ்வித பாகுபாடுமின்றி அனைவரும் சமம் என்ற அடிப்படையில் நாம் அனைவரும் மனித நேயத்துடன் செயல்பட்டு, பிறருக்கு உதவிடும் மனப்பான்மையினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

இவ்விழாவில், பள்ளிகள் அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டி, நாட்டியப் போட்டி, அழகு கையெழுத்துப் போட்டி ஆகிய போட்டிகளில் பங்கேற்று முதல் 3 இடங்களைப் பெற்ற அதிகரம் மற்றும் உஞ்சனை அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளி, அதிகரம் மற்றும் உஞ்சனை அரசு ஆதிதிராவிடர் துவக்கப்பள்ளி, மல்லல் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 81 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலை கதிரவன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் (பொ) பொ.கார்த்திகேயன், மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்புக் கண்காணிப்புக்குழு, ஆதிதிராவிடர் நலக் குழு மற்றும் தூய்மைப் பணிபுரிவோர் மாவட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் க.பொன்னுச்சாமி, அ.பூமிநாதன், இரா.செல்வகுமார், த.பாலாஜி, ச.புலிக்குட்டி, ந.பிச்சை, மலைச்சாமி, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி பேராசிரியர் சேவுகன், இணை பேராசிரியர் (பொருளியல்) சேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரி எம்.பரமசிவன், தலைமையாசிரியர் உஞ்சனை அரசு (ஆதிந) உயர்நிலைப்பள்ளி ஜெ.பொன்மனச்செம்மல், தனி வட்டாட்சியர்கள் (ஆதிந) ஆ.கந்தசாமி (தேவகோட்டை), வே.லெனின் (சிவகங்கை), மற்றும் விடுதிகாப்பாளர்கள், மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி அண்ணல் காந்தி நினைவு மண்டப வளாகத்தினை திறந்து வைத்து ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர்

கன்னியாகுமரி, பிப்.1



கன்னியாகுமரி கடற்கரையில் பகுதியில் அமைந்துள்ள தேசபிதா அண்ணல் காந்தியடிகளின் நினைவு மண்பட வளாகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் கடந்த 2000ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை 25வது வெள்ளி விழா நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. குறிப்பாக அய்யன் திருவள்ளுவர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் வகையில் அய்யன் திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் குறித்து அறிந்து கொள்ளும் வகையில் 37 கோடி மதிப்பில் அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகனாந்தர் பாறையினை இணைத்து கண்ணாடி இழைகூண்டுபாலம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது அனைத்து சுற்றுலாபயணிகளும் கண்ணாடி இழைப்பாலம் வழியாக நடந்து சென்று அய்யன் திருவள்ளுவர் சிலையினை ஆர்வமுடன் கண்டு வருகிறார்கள்.

மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட முக்கிய சுவர்களில் வண்ணமயமான சுவர் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இவற்றினையும் சுற்றுலா பயணிகள் பார்த்து மகிழ்கிறார்கள். அத்தோடு மட்டுமல்லாமல், பேரூராட்சி சார்பில் கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபம் அருகில் உள்ள முக்கோண பூங்காவினை பார்வையாளர்களை கவரும் வகையில் வடிவமைத்தது, அலங்கார வளைவு, விளையாட்டு உபகரணங்கள், லேசர் காட்சிகள் அமைக்கப்பட்டதை சுற்றுலாப்பயணிகள் கண்டு களித்து வருவதோடு, மிக விரைவில் கன்னியாகுமரி சுற்றுலாத்தளத்தினை மேம்படுத்தியதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன்ஒருபகுதியாக காந்தி நினைவு மண்டபம் அமைந்துள்ள வளாகத்தினை அழகுப்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் படி, ஊரக வளர்ச்சி முகமை மற்றும் பொதுபணித்துறை, பேரூராட்சிகள் உள்ளிட்ட துறைகளின் வாயிலாக சுற்றுலாப் பயணிகள் விளையாடி மகிழும் வகையில் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு மணக்காவிளை பகுதியை சாரந்த அனிஷ், அவர்களின் கைவண்ணத்தில் தத்துரூபமாக அமைக்கப்பட்ட அண்ணல் காந்தியடி அவர்களும் கர்மவீரர் காமராஜர் அவர்களும் பேசிக்கொண்டிருப்பது போன்ற சிலை அமைக்கப்பட்டுள்ளதை அனைத்து சுற்றுலாப் பயணிகளும் ஆர்வமுடன் பார்வையிட்டு புகைப்படம் எடுத் துக்கொள்கின்றனர். இச்சிற்பத்தினை மேம்படுத்தும் வகையில் பீடத்தை சுற்றி கிரானைட் கல் பதிக்கவும், சிலையை சுற்றி பூங்கா அமைக்கவும் பேரூராட்சி உதவி பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தரும் முதியோர், மாற்றுத்திறனாளி சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் சக்கர நாற்காலி, மின்கலத்தால் இயங்கும் சக்கர நாற்காலி, உதவி உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ள அறை நேரில் பார்வையிட்டு, தினமும் காலையில் மேற்குறிப்பிட்ட சுற்றுலாப்பயணிகளின் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்துவதை மாற்றுத்திறன் அலுவலர், பேரூராட்சி நிர்வாகம், செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் உள்ளிட்டவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப.. தெரிவித்தார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, அய்யன் திருவள்ளுவர் சிலை நூற்றாண்டு வெள்ளி விழாவினை முன்னிட்டு, திரிவேணி சங்கமம் முதல் சூரிய மறையும் இடம் வரை பேட்டரி வாகனத்தின் செயல்பாடுகள் குறித்து பெண் ஓட்டுநர்களிடம் கேட்டறிந்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், உதவி செயற்பொறியாளர் பாண்டியராஜன் உட்பட பல் கலந்து கொண்டார்கள்.

# பழனி அருகே மருத்துவமனை திறப்பு விழா

பழனி பிப்.1



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள நெய்க்காரப் பட்டியில் எஸ் கே சி மீனாட்சி சுந்தரம் நினைவு அறக்கட்டளை ,சேம்ஸ் பிசியோ ரீ கேப் கிளினிக் மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மீனாட்சி சந்தரம் நினைவு மருத்துவ மனையின் நிர்வாக இயக்குனர் ராஜா கௌதம் தலைமை தாங்கி மருத்துவமனையை திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் எலும் புகள் நிபுணர் ஸ்ருஜன் வத்ரநாபு, மற்றும் மருத்துவர்கள் சதீஷ், அனுராதா ,ஷாம் கிளமெண்ட், விஜயராம் போன்றோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக இதில் இந் நிகழ்வில் பேசிய மருத்துவர்கள் மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் இந்த மருத்துவமனை சிறப்பாக செயல்படும் என தெரிவித்தனர். இந்த திறப்பு விழாவில் 50க்கும் மேற்பட்ட கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



இராமநாதபுரம், பிப்.1

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர்சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வட்டார வாரியாக விவசாய சங்கப்பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளையும், கருத்துகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் பயிர் காப்பீடு, ஊரணி தூர் வாருதல், விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவது, கண்மாய்கள் தூர்வாருதல், தடுப்பணை கட்டுதல், பேருந்துகள் கூடுதலாக இயக்க வேண்டி, சாலைகள் சீரமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை விவசாய சங்கப்பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர். விவசாய பிரதிநிதிகள் வைத்த கோரிக்கைகளுக்கு துறைவாரியாக அலுவலர்கள் பதிலளித்தனர்.

மேலும் விவசாயிகள் நடப்பாண்டில் மழைக்காலம் தவறி பெய்து வரும் காரணமாக விளைந்த கதிர்கள் அறுவடை செய்யும் நிலையில் மழையால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிவிட்டது. இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பை சரி செய்யும் வகையில் உரிய நிவாரணம் பெற்றுத்தர கோரிக்கை வைத்தார்கள். இதுகுறித்து விவசாயிகளிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புள்ளியல் துறை, வேளாண்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை அளவீடு செய்து வருகிறார்கள். பாதிப்பு குறித்து அரசுக்கு தகவல் தெரிவித்து விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

மேலும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் கால தாமதமின்றி நெல் கொள்முதல் செய்ய விவசாயிகள் கோரிக்கை வைத்ததையொட்டி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் தேவையான அளவிற்கு பணியாளர்கள் நியமித்து விவசாயிகளிடம் முழுமையாக நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதேபோல் காட்டுப்பன்றிகள் விளைநிலங்களை சேதப்படுத்துவதை தடுத்திட அரசு வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு புச்சி நோய் விழிப்புணர்வு வழிகாட்டி கையேடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் பரமக்குடி சரகத்தில் அதிகளவில் பயிர்க் கடன் வழங்கியதற்காக காக்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் மாரிமுத்து அவர்களுக்கு பாராட்டுச் சான்றினையும், கால்நடை பராமரிப்பு கடன் அதிகளவில் வழங்கியதற்காக காமன் கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் வாசுதேவன் அவர்களுக்கு பாராட்டுச்சான்றினையும், மீனவர் கடன் அதிகளவில் வழங்கியதற்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் (பொறுப்பு) வேதமாணிக்கம் அவர்களுக்கு பாராட்டுச்சான்றினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வழங்கி பாராட்டினார்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு இரண்டிற்கும் மேற்பட்ட துறைகள் தொடர்பிருந்தால் உடனடியாக தொடர்புடைய அலுவலர்கள் ஆலோசனை செய்து விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. கோவிந்தராஜலு அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் மோகன்ராஜ் அவர்கள், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் ஜீனு அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) (பொ) பாஸ்கரமணியன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சோழவந்தான் அருகே பள்ளத்துக்குள் பாய்ந்த அரசு டவுன் பஸ்



சோழவந்தான், பிப் 1

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே நாச்சிகுளத்தில் இருந்து அண்ணா நிலையத்திற்கு அரசு டவுன் பஸ் புறப்பட்டது.

இந்த பஸ்ஸினை டிரைவர் பிரேம்குமார் என்பவர் ஒட்டினார். அதில் 20 பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்தனர் அந்த பஸ் காலை11.30 மணிக்கு திருவேடகம் அருகே உள்ள பள்ளிவாசல் பகுதியில் வந்த போது திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து சாலையோர தடுப்பில் மோதி அருகில் இருந்த தென்னந்தோப்பு பள்ளத்துக்குள் பாய்ந்து கவிழ்ந்தது.

இதில் ஈடுபாடுகளில் சிக்கிய 4 பேரில் ஒருவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது .இதில் 3 பேர் படுகாயம் அடைந்தனர். உடனே அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் தகவல் அறிந்த சோழவந்தான் போலீசார் சம்பவ இடத்திற்கு இணைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

# வத்தலகுண்டு நன்னாதா என்ற சுல்தான் சையது அலி சிவத்த மைதீன் ரலியின் 102 வது கந்தூரி விழா



வத்தலகுண்டு பிப்.1

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு கனவாய் பட்டி மஞ்சள் ஆற்றங்கரையில் அமைந்துள்ள நன்னாதா என்ற சுல்தான் சையது ரலி மற்றும் சிவத்த மைதீன் ரலி அவர்களின் 102 வது கந்தூரி விழா பள்ளியில் நடைபெற்றது விழாவில் மௌலிது சரிப், யாசின் ஓதுதல் மற்றும் சிறப்பு துஆ நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் தர்கா கமிட்டியாளர்கள் தலைவர் ராஜா முகமது செயலாளர் சிக்கந்தர் மஸ்தான் பொருளாளர் ஜாகிர் உசேன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் நன்னத்தா வாரிசுதாரர்கள் ஜமாத்தார்கள் பொதுமக்கள் நல்லடியார்கள் என பலர் கலந்து கொண்டனர். நன்னாத்தா தர்கா பள்ளிக்கு சந்தன குடம் எடுத்து ஊர்வலமாக வந்து அபிஷேகம் செய்தனர் மேலும் பக்தர்கள் காணிக்கையாக படைத்த பிஸ்கட் பேரிச்சம் பழம் சர்க்கரை புட்டு ஆரஞ்சு மிட்டாய் மற்றும் பழ வகைகளை தர்காவிற்கு வந்த பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு சிறப்பு சந்தனம் வழங்கப்பட்டது. 102 ஆண்டுகளாக இந்த கந்தூரி விழா நடைபெற்று வருவதாக தலைவர் ராஜா முகமது தெரிவித்தார். நன்னாத்தா தர்காவிற்கு கந்தூரி விழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி அருகே உள்ள புளியம்பட்டி புனித அந்தோணியார் திருத்தல ஆண்டு பெருவிழா





தூத்துக்குடி, பிப்.1

தூத்துக்குடி அருகே உள்ள புளியம்பட்டி புனித அந்தோணியார் திருத்தல ஆண்டு பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த கொடியேற்று விழாவில் அளவந்தன் குளம் பங்குத் தந்தையும் மறைவட்ட அதிவருமான அருட்தந்தை அந்தோணிவியாகப்பன், கொடியேற்றினார். இந்த சிறப்பு திருப்பதியில் அருட்தந்தையர்கள் லூர்துராஜ், சேசுராஜ், அருள், சைமன் செல்வன், சலேத் ஜெயபாலன், மைக்கேல் ராஜ், அருள்ராஜ், இம்மானுவேல் பிரான்சிஸ் ராஜ், அல்போன்ஸ் அருளானந்தம், ராபின், சந்தியாகு, சேவியராஜ், ஜோமிக்ஸ், அந்தோணி ராஜ், தேவராஜன், பிரான்சிஸ் சேவியர், ஜெமல்ஸ் ஜேம்ஸ், ஞானதினகரன், அருள் ஜோசப், ஸ்டீபன், ஜீவா, பீட்டர், சேவியர், தீபக் மைக்கேல் ராஜா, லூர்து மரிய சுதன், அந்தோணிசாமி, ஆண்டோ ஜோசப் ஜான்சன், சுந்தர், அந்தோணி சேவியர், லாரன்ஸ், மிக்கேல் ராஜ், சந்தியாகு, அமிர்தராஜசுந்தர், ஜான்சன், ரெக்ஸ் ஜஸ்டின், மைக்கேல் ஜார்ஜ் உட்பட பல அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் பங்கு பெற்றனர்.

இந்த திருவிழா திருப்பலி பிப்ரவரி 12ஆம் தேதி கொடி இரக்கத்துடன் நிறைவு பெறுகிறது. மேலும் ஜனவரி 31ஆம் தேதி ஜெபமாலை திருப்பலி நடைபெறுகிறது. பிப்ரவரி 4ம் தேதி ஒப்புரவு அருள் அடையாளமும், ஜெபமாலை திருப்பலியும் நடைபெறுகிறது. பிப்ரவரி ஒன்பதாம் தேதி நற்கருணை பவனி விழா நடைபெறுகிறது. பிப்ரவரி 10ஆம் தேதி திங்கள்கிழமை சப்பரபவனி திருப்பலி, குணமளிக்கும் வழிபாடு, போன்றவை நடைபெறுகிறது.

11ஆம் தேதி திருவிழா ஆடம்பர கூட்டு திருப்பலி நடைபெறுகிறது. அன்று முற்பகல் 11 45 க்கு பாளையங்கோட்டை மறை மாவட்ட ஆயர் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மதுரை உயர் மறை மாவட்டம் ஆயர் டாக்டர் அந்தோணிசாமி டிடி டிசிஎல் தலைமையில் திருப்பலி நடைபெறுகிறது. இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை புளியம்பட்டி புனித அந்தோனியார் ஆலய அதிபர் பங்கு தந்தை மோட்சராஜன் உதவி பங்குத்தந்தை மிக்கேல் சாமி ஆன்மீக தந்தைகள் சகாய தாசன், பீட்டர் பிச்சைக்கண் உட்பட அருள் சகோதரிகள் இறைமக்கள் புளியம்பட்டி பங்கு மக்கள் செய்து வருகிறார்கள்.

# சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் மதுரை மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கை



மதுரை, பிப்.1

சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கையை வைத்தார், அதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் ஆர்.பி. உதயகுமார் கூறியதாவது

எடப்பாடியார் முதலமைச்சர் இருந்த பொழுது, திருமங்கலம் தொகுதியில் உள்ள செக்கானூரணி பேருந்து நிலையம் சீரமைப்பு செய்யப்பட்டது, அதனை தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்தனர் அதனை தொடர்ந்து நான் கோரிக்கை வைத்த அடிப்படையில், தற்போது 8 கோடியே, 50 லட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்க தற்போது பூமி பூஜை போடப்பட்டுள்ளது, இந்த பேருந்து நிலையத்திற்கு தென் மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்தவரும், கட்சித்தீவு பிரச்சனைக்கு சட்டமன்றத்தில் குரல் கொடுத்த மூக்கையா தேவரின் திருவுருவ சிலையை வாயிலில் அமைத்தும், அதனைத் தொடர்ந்து பேருந்து நிலையத்திற்கு மூக்கையா தேவர் பெயரை சூட்ட வேண்டும்.

திருமங்கலம், ராஜபாளையம் ரோட்டில் நான்கு வழி சாலை அமைக்கப்பட்டு வருகிறது, இதில் ஆலம்பட்டி, சுப்புலாபுரம் தவிர மற்ற அனைத்து சாலைகளும் புறவழிச் சாலையில் இயங்குகிறது, இந்த ஆலம்பட்டி மற்றும் சுப்புலாபுரம் பகுதியில் ஊருக்குள் வருகிறது அதனால் மக்கள் கோரிக்கையை ஏற்று அணுகு சாலை மற்றும் சுரங்கப் பாதை அமைத்திட வேண்டுமென்று மக்கள் போராட்டம் செய்தனர், அதில் எடப்பாடியாரின் ஆணை பெற்று நானும் பங்கேற்றேன் ஆகவே இதை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை அளிக்கப்பட்டது.

மேலும் திருமங்கலம் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க எடப்பாடியாரின் ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டது, ஆனால் அந்த திட்டம் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது, திருமங்கலம் ரயில்வே கேட் அருகே அணுகு சாலை அமைக்க கோரிக்கை விடப்பட்டது ஆனால் அதையும் நிறைவேற்றாமல் உள்ளதால் விபத்து நடைபெறுகிறது, அதேபோல கொக்குளம் பகுதியில் சாலை பணி பாதியில் நிறுத்தப்பட்டு உள்ளது இதை முழுமையாக அமைக்க வேண்டும் என கோரிக்கையும் விடப்பட்டது.

இங்கே மத நல்லிணக்கத்துடன் மக்கள் மதுரையில் வாழ்கிறார்கள் இந்து, முஸ்லிம் கிறிஸ்தவ சகோதரர்கள் யாருக்கும் பிரச்சனை எழவில்லை, அதிகாரத்தில் உள்ளவர்கள் புதிதாக கண்டுபிடித்து போல பிரச்சனை எழுப்புகிறார்கள் இது மக்களுக்கு நல்லது அல்ல, சமூக நல்லிணத்திற்கும் நல்லதல்ல, எதிர்காலத்திற்கும் நல்லதல்ல, இளைஞர்களுக்கும் நல்லதல்ல, அவரவர் மத நம்பிக்கையை அவர் அவர் கடைபிடித்து கொள்ளலாம் என்று இந்திய அரசியல் சட்ட அமைப்பு கூறியுள்ளது. இதில் அரசு வேடிக்கை பார்க்கிறது, அரசு என்ன மறைமுகம் திட்ட வைத்துள்ளது? மக்கள் இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என கூறினார்.

அவருடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ் எஸ் சரவணன், மாநில நிர்வாகிகள் வெற்றிவேல், தனராஜன் ஏ.கே.பி. சிவசுப்ரமணியன், ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பழகன்,

செல்லம்பட்டி ராஜா மற்றும் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் கபி காசிமாயன், மாவட்ட மாணரவணி செயலாளர் மகேந்திர பாண்டி, மாவட்ட மீனவரணி செயலாளர் சரவண பாண்டி, முன்னாள் சேர்மன் லதா ஜெகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கம்பம் வீரப்பநாயக்கன்குளத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகர்மன்ற தலைவர் ஆய்வு



கம்பம், பிப்.1

கம்பம் வீரப்பநாயக்கன்குளம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, நகர்மன்ற தலைவர் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்

கம்பம் நகரின் கிழக்கு பகுதியில் நன்செய் நிலங்களின் பாசன ஆதாரமாக இந்த வீரப்பநாயக்கன் குளம் அமைந்துள்ளது. பெரியாறு ஆற்றில் இருந்து வரும் தண்ணீர் மற்றும் மழை நீர் மற்றும் கம்பம் பகுதி குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழி வுநீரும் குளத்தில் சங்கம கின்றன

இதன் மூலம் இப்பகுதியில் விவசாயிகள் நெல் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் நகர் பகுதியில் இருந்து வெளியேறும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் சேனை ஓடை மற்றும் சாக்கடை கால்வாய் மூலம் நேரடியாககுளத்தில் கலப்பதால் தற்போது குளம் மாசு அடைந்துள்ளன.

மேலும் குளத்தில் மண் மேவியும் பிளாஸ்டிக் கழிவுகளால் குளம் முழுவதும் ஆக்கிரமிப்பால். இதே நிலைமை நிலைமை நீடித்தால் குளத் தில்தண்ணீர் தேக்கி வைக்க முடியாது. மேலும், கழிவுநீரை மட்டும் வைத்து விவசாயம் செய்ய முடியாது. எனவே நகரில் இருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்த பிறகு குளத்தில் விட வேண்டும் என விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியனிடம் கோரிக்கை வைத்தனர்

அதன் பேரில் குளம் அருகே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கழிவுநீரை சுத்திகரித்து குளத்திற்குள் விட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென கம்பம் நகரில் இருந்து கழிவுநீர் வெளியேறி குளத்தில் கலக்கும் இடங்களில் நாள் ஒன்றுக்கு கழிவு நீர் எவ்வளவு கலக்கிறது என்ற கணக்கெடுப்பை நகராட்சி அதிகாரிகள் மேற்கொண்டனர். இதையடுத்து வீரப்பநாயக்கன் குளம் பகுதியில் கழிவு சுத்திகரிப்பு மையம் அமைப்பதற்கான இடத்தைதேர்வுசெய்தனர். அந்த இடத்தை நகர்மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் ஆணையாளர் உமா சங்கர், பொறியாளர் அய்யனார், உதவி பொறியாளர் சந்தோஷ்குமார், சுகாதார அலுவலர் அரசகுமார் ஆகியோர் பார்வையிட்டனர்.

பின்னர் அந்த இடத்தை நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்வதற்கு பொதுப்பணித் துறையினரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், மேலும் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சிகளின் நிர்வாக இயக்குனருக்கு அனுப்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த திட்டம் செயல்படுத்தப்படும் போது குளம் மாசு படுவது தவிர்க்கப்படும் என்றனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161